

மதுரை அவனியாபுரத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் மூத்த தலைவர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் திருப்பரங்குன்றம் தொகுதி கழக வேட்பாளர், தெற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கிருத்திகா தங்க பாண்டியனுக்கு ஆதரவாக உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் பகுதி செயலாளர் ஈஸ்வரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள், கூட்டணி கட்சியினர், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

## தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு

# தமிழ்நாடு அனைத்து கட்டிட - உடல் உழைப்புத் தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பு ஆதரவு!

### மாநிலத் தலைவர் ஆர்.கே.சந்திரசேகரன் – பொதுச் செயலாளர் ஏ.டி.மோகன் அறிவிப்பு!

சென்னை, ஏப். 18 -

தமிழ்நாடு அனைத்து கட்டிட மற்றும் உடல் உழைப்பு தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பு மாநிலத் தலைவர் ஆர்.கே.சந்திரசேகரன், பொதுச் செயலாளர் ஏ.டி.மோகன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு கட்டிட மற்றும் உடல் உழைப்பு தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பின் மாநில பொதுச் செயலாளர் ஏ.டி.மோகன் தலைமையில் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள், கலந்து ஆலோசித்து தற்போது நடைபெற இருக்கின்ற 2026 சட்டமன்ற பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எங்களது கூட்டமைப்பு சங்கம் முழு ஆதரவை தருகிறது.

கழக வெற்றிக்காக எங்களது தொழிலாளர்கள் அயராது பாடுபடுவார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

## வஞ்சகன் மோடியடா!

# சம்பந்தி வழக்கை முடிக்க சேராத இடம் சேர்ந்த எடப்பாடி!

### திண்டுக்கல்லில் 'கர்ணன்' படப் பாடல் பாடி இரா.முத்தரசன் தேர்தல் பிரச்சாரம்!



திண்டுக்கல், ஏப். 18 -

சம்பந்தி வழக்கை முடிப்பதற்காக சேராத இடம் சேர்ந்து வஞ்சத்தில் வீழ்ந்தாயடா, வஞ்சகன் மோடியடா என்று கர்ணன் படத்தில் வரும் பாடலை மெட்டு கட்டி பாடி வாக்கு சேகரித்தார் சி.பி.ஐ. கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான முத்தரசன். அது பற்றிய விவரம் வருமாறு.

புதனன்று திண்டுக்கல் நகரில் தி.மு.க. வேட்பாளர் ஐ.பி. செந்தில்குமாருக்கு வாக்கு சேகரித்து பேசும் போது இவ்வாறு பேசினார். மேலும் அவர் பேசுகையில்,

இது என்ன நாடாளுமன்றத் தேர்தலா இது சட்டமன்றத் தேர்தலா என்று கேட்கிறார்.

இது சட்டமன்ற தேர்தல் தான் இந்த சட்டமன்றத் தேர்தலில் மூலமாக

தமிழ்நாட்டுக்குள் நுழைய முடியாத ஒரு கட்சி ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இல்லாத கட்சி. பாசிச கொள்கையை நம்பக்கூடிய கட்சி . அ.தி.மு.க. தோள் மீது ஏறிக் கொண்டு வருவதை அனுமதிக்கலாமா என்பது தான் கேள்வி.

பாரதிய ஜனதா கட்சியை பற்றி நாம் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.

பெயருக்குத்தான் பாஜகவே தவிர. அது முழுக்க முழுக்க ஆர்.எஸ்.எஸ். கொள்கைகளை பின்பற்றக்கூடிய அமுல்படுத்தக்கூடிய கட்சி . தமிழ்நாட்டில் வருகின்ற 23ஆம் தேதி தேர்தல் நடக்க இருக்கிறது மேற்கு வங்கத்தில் 23ஆம் தேதியும் 29 ஆம் தேதியும் இரண்டு கட்டமாக தேர்தல் நடைபெற இருக்கிறது. இத்தகைய சூழ்நிலையில் நாடாளுமன்ற சிறப்பு கூட்டம் நடத்தப்படுகின்றனர்.

இது நியாயம்தானா? இது தான் ஜனநாயகமா ? தமிழ்நாட்டில் உள்ள 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் பரப்புரையில் இருக்கிறார்கள். அதே போல் மேற்கு வங்கத்தில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் பரப்புரையில் இருக்கிறார்கள்

தமிழக முதல்வரின் அறிக்கை அனைத்து நாளேடுகளிலும் வந்துள்ளது. நடுநிலையான பெரியவர்களை ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை உடையவர்களை தயவு செய்து முதலமைச்சரின் அறிக்கையை படித்து பாருங்கள் ஒரு முறைக்கு இருமுறை படித்துப் பாருங்கள்.

இந்த தொகுதிகள் அதிகரிப்பதின் மூலமாக தமிழ்நாடு உட்பட தென் மாநிலங்களை புறக்கணித்து வடமாநிலத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கையை அதிகரித்து நிரந்தரமாக இந்தியாவை பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சியை உருவாக்கி கொள்கின்ற தந்திர முயற்சியாக இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

அண்ணன் எடப்பாடி பழனிச்சாமி சிக்க கூடாத இடத்தில் சிக்கியுள்ளார்..

தெரிந்தோ தெரியாமலோ சிக்கிவிட்டார். . கர்ணன் திரைப்படத்தில் கண்ணதாசனின் பாடல்கள் வரும் செஞ்சோற்று கடன் தீர்க்க சேராத இடம் சேர்ந்து வஞ்சத்தில் வீழ்ந்தாயடா கர்ணா வஞ்சகன் கண்ணனடா. அந்தக் கண்ணதாசன் தற்போது இல்லை. அவர் இருந்திருந்தால் என்ன பாடுவார் தெரியுமா சம்பந்தியின் வழக்கை முடிக்க சேராத இடம் சேர்ந்து வஞ்சத்தில் வீழ்ந்தாயடா எடப்பாடி பழனிச்சாமி வஞ்சகன் மோடியடா என்று இன்று பாட்டு பாடி இருப்பார் அப்படி போய் வலையில் சிக்கிக் கொண்டார் சிலந்தி வலையில் சிக்கிக் கொண்ட ஈயை போல சிக்கி தவித்துக் கொண்டிருக்கிறார் . என்ற இரா.முத்தரசன் அவர்கள் செந்தில்குமாருக்கு உதய சூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார்.



அருப்புக்கோட்டையில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரனை ஆதரித்து தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா அவர்கள் பிரச்சாரம் செய்தார்.



விருதுநகரில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர் விஜய பிரபாகருக்கு வாக்கு கேட்டு பொதுக் கூட்டத்தில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ உரையாற்றினார். உடன் நகர திமுக செயலாளர் எஸ்.ஆர்.எஸ். தனபாலன், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி.ராஜகுரு, இளைஞர் அணி அமைப்பாளர் கிருஷ்ணகுமார், மாவட்ட செயலாளர் பாலசுப்பிரமணியம் சி.பி.எம், காங்கிரஸ் கிருஷ்ணமூர்த்தி, சிப்பிப்பாறை ரவிச்சந்திரன், நகரச் செயலாளர் ராமர் ஆகியோர் இருந்தனர்.



விருதுநகரில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி தி.மு.க. கூட்டணி வேட்பாளர் விஜய பிரபாகரை ஆதரித்து தேசிய திராவிடர் முற்போக்கு கழகம் பொதுச் செயலாளர் பிரேமலதா அவர்கள் விருதுநகர் பகுதி அல்லம்பட்டியில் முரசு சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர், அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சிங்கம்புணரி தெற்கு ஒன்றியம் ஆபத்தாரனன்பட்டியில் வாக்கு சேகரித்து பேசினார். உடன் சிங்கம் புனரி தெற்கு ஒன்றிய செயலாளர் கே.பாலசுப்பிரமணியன், துணைச் செயலாளர் எஸ்.முத்துகுமார், புகழேந்தி உட்பட கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டார்கள்.



தமிழ்நாட்டின் உரிமையைப் பறிக்கும் தொகுதி மறுவரையறை என்ற சட்டத்திருத்தத்தின் மூலம், தமிழ்நாட்டின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசு! தமிழ்நாட்டின் குரலை நசுக்கும் இந்த கருப்புச் சட்டத்திற்கு எதிராக ஒட்டுமொத்த தமிழ்நாடும் கிளர்ந்தெழுகிறது! அந்தவகையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதியின் வெல்லும் வேட்பாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் தலைமையில் கருப்பு கொடியேற்றி மசோதா நகலை தீயிட்டு கண்டனத்தை தெரிவித்தனர். இந்நிகழ்வில் ஒன்றிய நகர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் நிர்வாக பெருமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர் .

## விளாத்திக்குளத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்!

விளாத்திக்குளம், ஏப். 18 -

ஒன்றிய பாஜக அரசு கொண்டுவரும் தொகுதி மறுவரையறை மசோதாவை திரும்பப் பெற வலியுறுத்தி விளாத்திகுளம் திராவிட முன்னேற்றக் கழக கட்சி அலுவலகம் முன்பு நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் கலந்து கொண்டு தனது கண்டனத்தை பதிவு செய்தார்.

ஆர்ப்பாட்டத்தில் விளாத்திகுளம் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி, விளாத்திகுளம் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்புராஜன், விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற தலைவர் சூர்யா ஐயன் ராஜ், பொதுக்குழு உறுப்பினர் முத்துலட்சுமி, பேரூர் கழக அவைத்தலைவர் ராமலிங்கம், தலைமைக் கழக பேச்சாளர்கள் தமிழ் பிரியன், ஆனந்த், தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.

## கழகத் துணைப் பொதுச் செயலாளர்

# கனிமொழி கருணாநிதி எம்.பி.



### தேர்தல் பிரச்சாரச் சுற்றுப் பயண விபரங்கள் (கடலூர் , மயிலாடுதுறை)

**18.04.2026 (சனிக்கிழமை)**

| நேரம் | இடம் |
|---|---|
| 04:00 PM | **விருத்தாச்சலம் தொகுதி -** கூட்ரோடு, கருவேப்பிலங்குறிச்சி |
| 05:00 PM | **நெய்வேலி தொகுதி -** பண்ருட்டி – கும்பகோணம் மெயின்ரோடு NLC ஆர்ச் கேட் அருகில் |
| 06:00 PM | **குறிஞ்சிப்பாடி தொகுதி -** அண்ணா பேருந்து நிலையம் அருகில் |
| 07,00 PM | **புவனகிரி தொகுதி -** புவனகிரி பேருந்து நிலையம் அருகில் |
| 08,00 PM | **மயிலாடுதுறை தொகுதி -** திருக்கடையூர் கடைவீதி |